முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

அ.வ. எண். 175/2022

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | கிருஷ்ணமூர்த்தி |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | |
| வயது | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| தாலுக்கா | .. | |

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ஆம் நாள் புதன்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் சொந்த ஊர் முருகத்தான்பூண்டி கிராமம் ஆகும். என் தாத்தா பெயர் கிருஷ்ணகவுண்டர். கிருஷ்ணகவுண்டருக்கு என் அப்பா நடேச கவுண்டர், கண்ண கவுண்டர் ஆகிய 2 மகன்கள். நடேச கவுண்டருக்கு நான், மணி மற்றும் பெரியசாமி ஆகியோர் மகன்கள். கண்ண கவுண்டருக்கு மாணிக்கம் என்கிற ஒரே மகன். என் அப்பா நடேச கவுண்டரும், கண்ண கவுண்டரும் குடும்ப பாகபிரிவினை கூர்சீட்டு ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் தெரியாது. அந்த பாகபிரிவினை கூர்சீட்டில் என் தகப்பனாருக்கு எ ஷெட்யூல் சொத்தும் கண்ண கவுண்டருக்கு பி ஷெட்யூல் சொத்தும் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. நான் 2வது வரை படித்துள்ளேன் கையெழுத்து மட்டும் போடுவேன். என் அப்பாவின் கையெழுத்து தெரியும் என்றால் தெரியும். மேற்படி ஆவணத்தில் உள்ள என் அப்பா மற்றும்

சித்தப்பாவுடைய கையெழுத்து தான் மேற்படி ஆவணத்தில் உள்ளது என்றால் சரிதான். என் அப்பா, சித்தப்பாவிற்கு எவ்வளவு சொத்து வந்தது என்ற விவரம் தெரியாது. ஆனந்தன், சீனிவாசன் யார் என்றால் அவர்கள் பக்கத்து கழனியை சேர்ந்தவர்கள். ராஜேந்திரன் சொத்தை பதிவு செய்திருக்கிறார்கள் அதனால் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன். என் அப்பா இறந்து சுமார் 15 வருடங்கள் ஆகிறது. என் அப்பாவிற்கு உள்ள சொத்தை எங்கள் அண்ணன், தம்பி பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். கண்ண கவுண்டர் சொத்தினை அவரது மகன் மாணிக்கம் அனுபவித்து வருகிறாரா என்றால் இல்லை நான் தான் அனுபவித்து வருகிறேன். நான் தான் அனுபவித்து வருகிறேன் என்பதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கண்ண கவுண்டருக்கு பாகமாக வந்த சொத்தில் லட்சுமணனுக்கு எவ்வளவு விற்பனை செய்துள்ளார் என்றால் 2 ஏக்கர் 71 செண்ட் விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். எந்த வருடம் விற்றார் என்றால் சுமார் 20 வருடம் இருக்கும். மேற்படி 2 ஏக்கர் 71 செண்ட் சொத்தை பட்டா மாற்றி லட்சுமணன் அனுபவித்து வருகிறார் என்றால் நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். மேற்படி நிலத்தில் 25 செண்ட் நிலத்தை 6ம் பிரதிவாதி கண்ணாயிரத்திற்கு விற்பனை செய்தார் என்றால் சரிதான். மேற்படி கண்ணாயிரத்திற்கு விற்ற சொத்தில் இருந்து 25 செண்ட் நிலத்தை லட்சுமணன் திரும்ப வாங்கிவிட்டார் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு எவ்வளவு பாகம் வந்தது என்றால் 2 ஏக்கர் 1 செண்ட் வந்தது. என் சித்தப்பாவிற்கு எவ்வளவு பாகம் வந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு ஒரு ஏக்கரும், என் அண்ணன் மணிக்கு ஒரு ஏக்கர் ஒரு செண்டும் என் அப்பா தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்தார். என் அப்பா எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் செல்லாது என்றும் அது லட்சுமணனுக்கு பாத்தியப்பட்டது

என்றும் சொன்னால் சரியல்ல. செட்டில்மெண்ட் எழுதிய தேதி, வருடம் ஞாபகமில்லை. செட்டில்மெண்ட் எழுதிவைத்த இடத்தின் சர்வே எண். 74. 2 ஏக்கர் ஒரு செண்ட்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.